**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14.06.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு குறித்த கோடைகால பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் சார்பில், வென்ச்சர் கேப்பிட்டல் திட்டத்தின் கீழ் 2023 மே 23 முதல் 26 வரை நான்கு நாட்கள் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு நடைபெற்றது. இந்த திட்டம் ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் உயிர் அறிவியல் பிரிவில் உள்ள பிற நிறுவனங்களில் இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டம் பெற்ற மாணவர்கள் முழு மரபணு வரிசைப்படுத்தல் தரவு பகுப்பாய்வு மற்றும் விளக்கங்கள் குறித்து தெளிவுபடுத்தியது. இப்பயிற்சியில் மரபணு பொறியியல், உயிரி தொழில்நுட்பம், தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல், தாவர உடலியல், வேளாண்மை மற்றும் நுண்ணுயிரியல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த 25 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர்.

இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், ஹைதராபாத்தில் உள்ள இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், சேலம் ராசி விதைகள் பிரைவேட் லிமிடெட், கோவா சி.எஸ்.ஐ.ஆர்- தேசிய கடலியல் நிறுவனம், வேலூர் விஐடி பல்கலைக்கழகம், ஹைதராபாத் காவேரி விதைகள் பிரைவேட் லிமிடெட், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம், குஜராத் பரோடாவின் மஹர்ஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் வன மரபியல் மற்றும் மர இனப்பெருக்க நிறுவனம், ஹயாத்நகர், தெலுங்கானாவின் அனுராக் பல்கலைக்கழகம், ஈரோடு குமரகுரு வேளாண்மை நிறுவனம், கோயம்புத்தூர் ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள், மாணவர்கள் பங்கேற்றனர்.

இப்பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியரும், தலைவருமான (பயோடெக்) முனைவர் இ.கோகிலாதேவி வரவேற்புரையாற்றினார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில், தலைமை வகித்தார். விதை மைய இயக்குநர் முனைவர் ர.உமாராணி சிறப்புரையாற்றினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.ஜெயகாந்தன், உதவிப் பேராசிரியர் நன்றியுரையாற்றினார். நிறைவு விழா **26.05.2023** அன்று நடைபெற்றது. பேராசிரியர் மற்றும் தலைவர் (பயோடெக்) முனைவர் இ.கோகிலாதேவி வரவேற்புரையாற்றினார். உதவிப்பேராசிரியர் முனைவர் மு.ஜெயகாந்தன், பயிற்சி அறிக்கையை சமர்ப்பித்தார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில் நிறைவுரையாற்றினார். தொடர்ந்து தாவரப் பாதுகாப்பு ஆய்வு மைய இயக்குநர் முனைவர் மு.சாந்தி வாழ்த்துரை வழங்கினார். உதவிப்பேராசிரியர் திருமதி.என்.பாரதி, நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**